செ.வெ.எண்:26/செப்டம்பர் நாள்: 15.09.2021

## இராமநாதபுரம் மாவட்டம்

## திருத்தியமைக்கப்பட்ட பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டம் பதிவு செய்து பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ஜெ.யு.சந்திரகலா,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

திருத்தியமைக்கப்பட்ட பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் நெல் பயிருக்கு பயிர் காப்பீடு செய்திட விவசாய பெருமக்களை மாவட்ட ஆட்சியர் கேட்டுக்கொண்டுள்ளார். இராமநாதபுரம் மாவட்டத்தில் 2016-17 சம்பா பருவம் முதல் பிரதம மந்திரி பயிர் காப்பீடு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த திட்டத்தின் கீழ் இதுவரை விவசாயிகளுக்கு ரூ.1428.14 கோடி இழப்பீட்டுத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

நடப்பாண்டில் 2021-22 நெல் சம்பா பருவத்தில் இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. இந்த திருத்தியமைக்கப்பட்ட பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு எதிர்பாராமல் ஏற்படும் பயிர் மகசூல் இழப்புகளுக்கு உரிய நிதியுதவி வழங்கி பாதுகாக்கவும், பண்ணை வருவாயை நிலைப்படுத்தவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த திட்டத்தை மத்திய அரசு பொதுத் துறை நிறுவனமான இந்திய வேளாண் காப்பீட்டு நிறுவனம் இராமநாதபுரம் மாவட்டத்தில் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தில் நெல் சம்பா பயிருக்கு ஏக்கருக்கு ரூ.326.15 பிரிமீயத் தொகையாக செலுத்த வேண்டும். காப்பீட்டுத் தொகை ஏக்கர் ஒன்றுக்கு ரூ.21743.32. பிரிமீயம் செலுத்த கடைசி நாள்:15.11.2021 ஆகும்.

விவசாயிகள் கிராம நிர்வாக அலுவலர்கள் வழங்கும் மூவிதழ் அடங்கல் படிவத்தைப் பெற்று அத்துடன் விண்ணப்ப படிவம், முன்மொழிவு படிவம், ஆதார் கார்டு நகல், மற்றும் வங்கி சேமிப்புக் கணக்கு விபரம் ஆகியவற்றுடன் அந்தந்த பகுதி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், நிர்ணயிக்கப்பட்ட பொது சேவை மையங்கள் மற்றும் விவசாயிகளின் வங்கிக் கணக்கு உள்ள பொது உடமை வங்கிகளை தொடர்பு கொண்டு பிரிமீயம் செலுத்தி பயிர் காப்பீடு செய்திட கேட்டுக்கொள்ளப்படுகிறது. இத்திட்டத்தில் கடன் பெறும் மற்றும் கடன் பெறா விவசாயிகள் விருப்பத்தின்பேரில் பதிவு செய்யலாம். வேளாண்மைத்துறை மூலம் கிராமங்கள் தோறும் இது தொடர்பான விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்படவுள்ளது. எனவே, விவசாய பெருமக்கள் உடன் காப்பீடு செய்து பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இத்திட்டம் தொடர்பான கூடுதல் விபரங்களுக்கு அந்தந்த வட்டார வேளாண்மை விரிவாக்கமையங்களை அணுகவும், என் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ஜெ.யு.சந்திரகலா,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**